தொழில்நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்
ஆணையர் (மு.கூ.பொ),
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

பெறுநர்
முதல்வர்கள்,
அனைத்து பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள்.

---

கடித எண். 47044 / பொ.த.அ / 2017, நாள்: 20 .12 .2017

பொருள்: தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – பொது தகவல் அலுவலர் - தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை, வழக்கு எண். 2405 / 2017, நாள்: 09.08.2017 தீர்ப்புரையை தகவலுக்காக வெளியிடுவது - தொடர்பாக.

பார்வை: அரசு கடித எண். 29133 / நி.சீ.3 / 2017 – 1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ-3) துறை, தலைமைச் செயலகம், சென்னை / நாள்: 09.11.2017.

----------

பார்வையில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு தகவல் ஆணையம் தனது 09.08.2017 நாளிட்ட (வழக்கு எண் 2405/2017) தீர்ப்பினில், " தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ் மனுதாரர், (i) ஒரே மனுவில் பல்வேறு கேள்விகள் கேட்பது (ii) ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத பல்வேறு கேள்விகளை கேட்பது (iii) மனுவினை ஒரு அலுவலருக்கு அனுப்பி அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் வேறொரு அலுவலரிடம் கோருவது (iv) சாதாரண / புகார் மனுவின் மீது என்ன / எப்போது / எப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என வினவுவது" போன்றவை முறையானதல்ல என்ற வகையில் வழங்கியுள்ள தீர்ப்புரையின் நகல், அரசின் www.tnsic.gov.in/judgements/new/pdfs/T-SA-2405-09082017.pdf என்ற வலைத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் பதிவேற்றம் (upload) செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் தலைமைச் செயலகத்துறைகள் 192.168.45.78/par/communication/O.No.2405-TNSIC-2017.pdf என்ற வலைதள முகவரியில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள வலைதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் (சென்னை) தீர்ப்பாணை இத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து கல்லூரி முதல்வர்களும் அவரவர் கல்லூரிகளில் பணிபுரியும் பொது தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : மேற்கூறியவாறு

20/12/17

ஆணையருக்காக

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), தேனாம்பேட்டை,
சென்னை – 600 018. தொலைபேசி எண். 044-24347590.

ஆணை எண். 2405/மாததஆ/2017 நாள் : 09.08.2017

**திரு. கு. இராமாநுசம், இ.கா.ப., (ஓய்வு),**
**மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர்**

திரு ஆர். சந்திரசேகரன் – மேல்முறையீட்டாளர்

Vs

பொது தகவல் அலுவலர்/
மாவட்ட நீதிபதியின் நேர்முக உதவியாளர்,
கரூர் மாவட்ட நீதிமன்றம்,
கரூர் – பொது அதிகார அமைப்பு

----

## ஆணை

மனுதாரர் மொத்தம் 21 கோரிக்கைகளை முன்வைத்து மனு அனுப்பியுள்ளார். பல கோரிக்கைகளில், ஒன்றுக்கு மேற்பட்ட விவரங்கள் கோரப்பட்டுள்ளன. 50-க்கும் மேற்பட்ட விவரங்கள் கோரப் பட்டுள்ளது காணப் படுகிறது.. இவற்றில் பல தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் பதில் அளிக்கக் கூடியவை அல்ல. என்ன நடவடிக்கை எடுப்பீர்கள், எப்போது திருத்துவீர்கள், எப்போது வழங்குவீர்கள் முதலியவை பொது தகவல் அலுவலர் அளிக்கக் கூடிய தகவல்கள் அல்ல. பொது தகவல் அலுவலர் தன் வசம் இருக்கும் ஆவணங்களின் நகல்களை அல்லது அவற்றில் அடங்கியிருக்கும் தகவல்களைத்தான் தர இயலும். எப்பொழுது நடவடிக்கை எடுக்கப் படும் என்பது அவர் கணக்கிட்டு அல்லது விசாரணை செய்து அளிக்க வேண்டிய தகவல் இல்லை. மேலும், 16.9.2016 அன்று நகல் மனுவிற்கான விண்ணப்பம் அளித்து விட்டு அடுத்த மூன்றாவது நாளே அந்த ஆவணங்கள் பெற நீதிமன்ற வில்லை எவ்வளவு செலுத்த வேண்டும் என்று தகவல் பெறும் உரிமை சட்ட விண்ணப்பமாக அனுப்புவது, இந்த சட்டத்தை தவறாக பயன் படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும், ஒரு குறிப்பிட்ட வழக்கு பற்றி உயர் நீதி மன்றத்திற்கு வழக்கு கட்டை அனுப்பி கருத்து கேட்டு, முடிவெடுத்து தனக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறி இருப்பது முற்றிலும் முறையற்றது. மனுதாரர் சுமார் 80-க்கு மேற்பட்ட முறையீடுகளை இவ்வாணையத்திற்கு அனுப்பி உள்ளவர். தகவல் பெறும் உரிமை சட்டம் பற்றி விவரம் அறியாதவர் அல்ல. பொது தகவல் அலுவலர் கோரிக்கை ஒவ்வொன்றிற்கும் பதில் அளித்துள்ளார். ஆயினும், இது போன்ற மனுக்களினால், ஒவ்வொரு கோரிக்கையாக பரிசீலித்து பதில் தயார் செய்து அனுப்ப வேண்டியுள்ளது, நீதி மன்ற வழக்குகளுக்கு இடையூறாக அமைகிறது. தலைமை செயலருக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தான் புகார் மனு அனுப்பி,

அதன் நகலை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பியதாக கூறி, அதன் மீது எடுத்த நடவடிக்கை என்று மூன்று கோரிக்கைளை எழுப்பியுள்ளார். தலைமை செயலருக்கு மனு அனுப்பி விட்டு அது பற்றி முதன்மை மாவட்ட நீதிபதியிடம் விவரம் கேட்பது தகவல் பெறும் உரிமை சட்டத்தையும் , பொது தகவல் அலுவலர் என்ற பொறுப்பையும் கேலிக்கூத்தாகும் முயற்சியாகும். மேலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத பல்வேறு பொருள்கள் பற்றி, ஒரே மனுவில், இத்தனை கேள்விகள் எழுப்புவது, பொறுப்புள்ள ஒரு அலுவலரின் நேரத்தையும் பணியையும் வீணாக்குவதாகும். ஒரே பொது தகவல் அலுவலர் மற்றும் ஒரே மனுதாரர் என்பதை தவிர, இந்த மனுவில் காணப்படும் கோரிக்கைகளை இணைக்கும் இழை எதுவும் இல்லை. ஒவ்வொரு பொருள் பற்றியும் தனிப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பாமல், ஒரே விண்ணப்பமாக அனுப்பும் போது, அதற்கு பதில் தர பொது தகவல் அலுவலர் பல மணி நேரம் செலவழிக்க வேண்டியிருந்தாலும் ஒரே விண்ணப்பத்திற்கான கட்டணம் மட்டும் அரசுக்கு சென்றடைகிறது. இந்த மனுவில் தகவல் பெறும் நோக்கத்தை விட, பொது தகவல் அலுவலருக்கு தேவையற்ற தொல்லை தரும் நோக்கம் தான் மேலோங்கி உள்ளது.

2. இது போன்றவற்றைக் கருத்தில் கொண்டுதான் Civil Appeal எண்.6454/2011 (CBSE Vs ஆதித்ய பந்தோபாத்யாய) என்ற வழக்கில் கீழ் கண்டவாறு மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது:

> "பொது அதிகார அமைப்பிடம் (பணியில் வெளிப்படை தன்மை குறித்தோ மற்றும் அவர்கள் பொறுப்புடைமை குறித்தோ மற்றும் ஊழலை ஒழிப்பது குறித்தோ அல்லாமல்) பகுத்தறியாமல், செயற்முறைபடுத்த இயலாத வகையில் தகவல்களாக கேட்டு கோரிக்கை வைப்பதோ, அல்லது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அவ்வாறு வழங்க ஆணையிடுவதோ நிர்வாகத்தின் திறனுக்கு எதிர்மறையான விளைவை ஏற்படுத்துவதோடு, நிர்வாகத்தில் உள்ளவர்களை தகவல் சேகரித்து வழங்குவதை மட்டும் செய்து ஆக்கபூர்வமில்லாத பணியில் மூழ்கடிக்கச் செய்துவிடும்... மேலும் 75 விழுக்காடு பொது அதிகார அமைப்பின் பணியாளர்கள், அவர்களது 75 விழுக்காடு நேரத்தினை தகவல்களை சேகரிக்கவும், மனுதாரர்களுக்கு அதை வழங்கிடவும் செலவிடுவதைப்போன்ற ஒரு காட்சியை நாடு காண விரும்பவில்லை. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வருகின்ற தண்டனைக்கு அஞ்சி பொது அதிகார அமைப்பின் பணியாளர்கள் தகவல் வழங்குவதற்கு முன்னுரிமை அளித்து, தேவையான மற்றும் வழக்கமான அவர்களது பணிகளை புறந்தள்ளும் நிலை எழக்கூடாது."

3. ஒரு விண்ணப்பத்தில் ஒரு பொருள் பற்றி குறிப்பிட்ட அளவிலான தகவல் தான் கோர இயலும் என்று சில மாநிலங்களில் விதி செய்யப்பட்டுள்ளது போல், இங்கும் கட்டுப்பாடு ஏற்படுத்தும் நிலையை இது போன்ற மனுக்கள் ஏற்படுத்த நேர்ந்தால், இந்த சட்டத்தின் மூலம் முறையான தகவலும் தீர்வும் தேடும் நூற்றுக் கணக்கானோர் பாதிக்க படும் நிலை எழும்.

4. பொது தகவல் அலுவலர் முடிவு முறையானது என்று கருதி இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப் படுகிறது.

5. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு வழிமுறை) விதிகள் 2012ல் விதி 5(1) (vii) கீழ் ஆவணங்களையும் ஆதாரங்களையும் பரிசீலித்து இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர்

/ஆணைப்படி/

உதவிப் பதிவாளர்

பெறுநர்

பொது தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட நீதிபதியின் நேர்முக உதவியாளர்,
கரூர் மாவட்ட நீதிமன்றம்,
கரூர் 7, கரூர் மாவட்டம்

திரு ஆர். சந்திரசேகரன்,
த/பெ பி.எம். ரங்கசாமி,
19/2 , அண்ணாநகர் 2வது தெரு,
ராயனூர், கரூர் 3
கரூர் மாவட்டம்

செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

Kas.pps.09.08.2017